**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : CC.475/2024**

**Prosecution witness : அ.சா. 10** **Date : 16.07.2025.**

| | |
|---|---|
| **Name : பாலு** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused Present.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஓமலூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, கடந்த 27.02.2021–ம் தேதி மாலை 6.00 மணிக்கு இவ்வழக்கில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் பாலு அவர்கள் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, மேட்டூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற காயத்தகவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த போது என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப மேச்சேரி காவல் நிலைய குற்றஎண்.124/2021 ச/பி 294(பி), 323, 324 இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.4** ஆகும்.

2. பிறகு நான் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 28.02.2021 ம் தேதி காலை 8.30 மணிக்கு சம்பவ இடமான பொட்டனேரி பாரி நகர் பெரியாண்டச்சி கோவில் அருகே சென்று சாட்சிகள் சதிஸ், சங்கர் கணேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.5** ஆகும். வரைபடம் **அ.த.சா.ஆ.6** ஆகும்.

3. பின்பு நான்  சாட்சிகள் போது, கல்யாணி, தங்கமணி, நேசமணி, ரவி, ரங்கநாதன், சதிஸ் மற்றும் சங்கர்கணேஷ்  விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் காயமடைந்த போது என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரசாந்த் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு  பெற்றேன். காயம் பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என மருத்துவர் கருத்துரை வழங்கினார். பின்னர் மேல் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் அருண்குமார் வசம் ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4) இந்த வழக்கு சம்பந்தமாக எந்த தேதியில் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் 28.02.2021ம் தேதி காலை 8.30 மணிக்கு சென்றேன். கடந்த 27.02.2021ம் தேதி மாலை 6 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் ஆமாம். எனது விசாரணையின் அடிப்படையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி என்னவென்றால் 21.02.2021 மணி மாலை 5 ஆகும். சம்பவம் நடந்து 4 நாட்கள் கழித்து ஏன் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் மனு ரசீது 69/2021 என்று வழங்கப்பட்டு விசாரணை நடைப்பெற்றது. குற்ற நிகழ்வு நாள் 21.01.2021 என காணப்பட்ட நிலையில் தகவல் கிடைத்த நாள் 27.01.2021 என உள்ள நிலையில் காணப்படும் வேறுபாடு என்னவென்றால் ரசீது போடப்பட்டு விசாரணை நடைப்பெற்றது. முதல் தகவல் அறிக்கை 23.02.2021 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக மருத்துவமனை சென்று வாக்குமூலம் நான் தான் பெற்று வந்தேன் என்றால் ஆமாம். 23.02.2021ம் தேதி இந்த வழக்கின் புகார்தாரர் மீது இந்த வழக்கின் எதிரி அடித்துவிட்டதாக சொல்லி ஆஜர் எதிரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தாரா என்றால் இருந்தார்.

5) ஆஜர் எதிரியிடமிருந்து மருத்துவமனையில் அதே தேதியில் வாக்குமூலம் பெற்று வந்தேன் என்றால் சரிதான். குற்ற எண்.124/2021 மற்றும் குற்ற எண்.125/2021 இரு வழக்குகளுக்கும் முதல் தகவல் அறிக்கை என்னால் தான்

பதியப்பட்டது என்றால் ஆமாம். சம்பவயிடத்தில் இரு வழக்குகளுக்கும் என்னால் ஒன்றாக விசாரணை செய்யப்பட்டதா அல்லது தனித்தனியாக விசாரிக்கப்பட்டதா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. சம்பவம் நடப்பதற்கு முன்பாக ஆஜர் எதிரிக்கும் வாதிக்கும் நிலப்பிரச்சனை சம்மந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

6) சம்பவம் நடைபெற முன்பு சிவில் நீதிமன்றத்தில் ஆஜர் எதிரி கோவிந்தராஜ் என்பவருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்ட விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். சம்பவயிடத்தில் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் கோவிந்தராஜ் என்பவருக்கு சொந்தமான இடம் என நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

7) இரு வழக்குகளுக்கும் நான் புலன் விசாரணை அதிகாரி என்ற நிலையில் ஒரே நேரத்தில் சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் கோவிந்தராஜ் என்பவருக்கு போதுராஜ் என்பவர் அடித்து வலது கை எலும்பு முறிவு ஏற்பட்டதாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். ஒரே சமயத்தில் ஒரே நேரத்தில் இரு வேறு தரப்பினர் சண்டையிடும் போது உண்மையான குற்றவாளி யார் என்று நான் கண்டறிந்து அவர்கள் மீது மட்டும் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் இரு தரப்பினருக்கும் காயம் இருந்ததால் இரு தரப்பினரிடையே வழக்கு பதியப்பட்டது.

8) வழக்கின் புகார்தாரர் போது வகையறா தாக்கப்பட்டு வலது கை எலும்பு முறிவு ஏற்பட்ட பிறகு அதே கையால் கல்லை எடுத்து வேறு நபருக்கு காயம் ஏற்படுத்த யாராலும் முடியாது என்றால் வாய்ப்புள்ளது. சம்பவ சாட்சிகள் அனைவரும் பெரியாண்டிச்சி அம்மன் கோவிலில் கோவிந்தராஜ் சுத்தம் செய்த போது அது குறித்து கேட்டதற்கு அடித்ததாக என் விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம்.

9) மாதிரி வரைபடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தடம் என காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அது மண் தடம் என காட்டப்பட்டுள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடம் கோவிந்தராஜ் என்பவருக்கு சொந்தமான இடம் என்றால் ஆமாம். சம்பவயிடத்தில் போது, கல்யாணி, நேசமணி ஆகியோர் கோவிந்தராஜை அடித்ததால் தான் குற்ற எண்.125/2021 பதிவு செய்தேன் என்றால் ஆமாம். சம்பவயிடத்தில் இந்த வழக்கின் புகார்தாரர் போது, கல்யாணி, நேசமணி அனைவரும் என் விசாரணைப்படி கோவிந்தராஜ் என்பவருக்கு சொந்தமான இடத்தில் அத்து மீறி உள்ளே நுழைந்து பிரச்சனை செய்ததாக என் விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம்.

10) இந்த வழக்கில் நேசமணி கண்ணுற்ற சாட்சி என்றால் ஆமாம். நேசமணி அவரது சாட்சியத்தில் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும் அவரது அம்மா போன் செய்த பின்னர் தான் சம்பவயிடம் வந்ததாக சொல்லியுள்ளார் என்றால் என் விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை. குற்ற எண்.125/2021 ல் நேசமணி கோவிந்தராஜை அடித்ததாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

11) என் விசாரணையில் எதிரி கோவிந்தராஜ் எந்த ஆயுதத்தை பயன்படுத்தி போதுவை அடித்ததாக விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் சரியாக நினைவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக சான்று பொருளை கைப்பற்றவில்லை என்றால் ஆமாம். அடித்து மண்டை உடைந்த பின்னர் ரத்த கறை படிந்த பேன்ட், சர்ட் இந்த வழக்கில் சான்று பொருளாக காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. ஒரே நேரத்தில் ஒரே தேதியில் இரு வேறு வழக்குகள் நடந்துள்ளதால் நான் அதனை சரியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

12) இந்த வழக்கின் உண்மை தன்மையை அறியாமல் போது கொடுத்த புகாரின் மீது எதிரி மீது தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிகளை விசாரித்துள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை. உண்மையில் இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றாலும்

சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறான முதல் தகவல் அறிக்கை  தாக்கல் செய்து சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.